### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! ஆர்.கோபாலகிருஷ்ணன் தலைமையில்

# வில்லிவாக்கம் மேற்கு பகுதி சார்பில் சுமைதூக்கும் தொழிலாளர்களுக்கு நலஉதவிகள்!

## அமைச்சர் பி.மூர்த்தி வழங்கினார்!





சென்னை, ஏப்.8-

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், கழக தலைவர் 72 வது பிறந்த நாள் - மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு - வில்லிவாக்கம் மேற்கு பகுதி பகுதி சார்பாக, சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு -வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பித்தார்.

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில் மக்கள் முதல்வரின் மனிதநேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் - 43, அடுத்தவர் பாரம் ஏற்போம்! அன்போடு குறைகள் தீர்ப்போம்!!!! எனும் தலைப்பில் வில்லிவாக்கம் மேற்கு பகுதியில் மாபெரும் நலத்திட்டம் 06.04.2025 அன்று காலை 9 மணியளவில், சென்னை, சிட்கோ நகர், வில்லிவாக்கத்தில் நடைபெற்றது.

இப்புகழரங்கத்தில் மாவட்ட பிரதிநிதி ஆர்.கோபாலகிருஷ்ணன் தலைமை வகித்தார். சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக் குழும அமைச்சர் பி.கே.சேகர்பாபு, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, கூ.பீ.ஜெயின் எம்.சி, வே.வாசு, சாவித்திரி வீரராகவன், சுதா தீனதயாளன் எம்.சி, டி.வி.செம்மொழி எம்.சி, வானவில் விஜய், ஆர்.வரதன், ஜி.ஜெ.பிரபு, சிட்கோ.சேகர், ஜெ.எஸ்.பிரபு, வி.து.இராமமூர்த்தி, பா.இளையா, ம.கலைச்செல்வி, ஐ.சி.எப்.மு.சுரேஷ்பாபு, ஆர்.தீனதயாளன், மா.அகிலன், க.சுகுமாரன், பா.ஜானி, சொ.முருகேசந், ப.லோகுபாபு முன்னிலை வகித்தனர்.

கோ.மணிவேந்தன், மா.கபிலன், பா.தே.தீனதயாளன், கே.எஸ்.பிரபு, க.மணிமாறன், எஸ்.கே.பி.தீப்குமார், ம.சுந்தர்எபி, ஆ.சக்திவேல், பூ.சத்தியேந்திரன், ஜெ.கணேசன், இன்டிரியர் பா.ஆறுமுகம், கோனிகா பாஸ்கர், இரா.ஷஷீலா, கேபிள்.ஜெ.கண்ணன், கே.ஞானசேகரன், எ.தேவராஜ், ஜெ.செல்வராஜ், ஸ்ரீ.ஸ்ரீதர் வரவேற்றனர்.

இம்மாபெரும் நலத்திட்ட விழாவில் சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு -வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.

மேலும், இப்புகழரங்கத்தில் பெருநகர சென்னை மேயர் பிரியா ராஜன், ப.ரங்கநாதன், ஓ.ஏ.நாகலிங்கம், புரசை டி.சம்பத், டி.தாமோதரன், டபள்யூ.அமுல், நா.அறிவுடைநம்பி. வில்லிவாக்கம் கிழக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: எ.வேதா, விக்னேஷ் சீனிவாசன், ச.மனோகரன், கே.பாஸ்கர், சி.தேவராஜ், காஞ்சி செ.துரை. வில்லிவாக்கம் கிழக்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள்: வி.சபாபதி, வ.ரமேஷ்பாபு, மு.பரமானந்தம், டி.ஸ்டாலின், ந.குமார், எ.சத்தியநாராயன், கி.ஜெய்சங்கர், ப.செந்தில்குமார், எஸ்.துரைபாபு, கே.ராஜா, வி.ஆர்.ஜெயக்குமார். மாவட்ட பிற அணி இணை துணை அமைப்பாளர்கள்: வழக்கறிஞர் இந்திரஜித், காஞ்சி பாஸ்கர், எஸ்.எஸ்.மணிகண்டன், ப.மலர்கொடி, சிட்கோ.எஸ்.அன்வர்தீன், சாந்திபில்லி, தே.ச.சுந்தர், ஜி.கே.வெங்கட், வழக்கறிஞர் பி.கோபிலதா, வழக்கறிஞர் ஜெ.சரவண்ன், வழக்கறிஞர் மா.முரளி வினோத், ஒசோன் மனோகரன், பொறியாளர் எம்.எஸ்.ரமேஷ், டாக்டர் எம்.ஜி.திவ்யானந்தன், வழக்கறிஞர் சாந்தனு, ஸ்டண்டு வி.புஷ்பராஜ், ஜி.எம்.முரளி(எ) சையத், டி.பாஸ்கரன், ச.காளிதாசன், சிட்கோ த.விஜயகுமார், கே.தங்கவேல்ராஜன், டி.சையத் நியமதுல்லா, செங்கை சண்முகம், ஆ.சுரேஷ்குமார், வழக்கறிஞர் எம்.குணசேகரன், என்.எஸ். விஜயகுமார், வழக்கறிஞர் கே.சுப்பிரமணி, எஸ்.பி.ஜெகா, பி.ஜெயந்தி, உ.பிரசன்னவேலன், வழக்கறிஞர் பா.சுந்தர், கா.யுவராணி, கே.ஜி.அப்பாதுரை, ஆர்.ராஜசேகர், ஜி.என்.மோகன்குமார், வி.ராஜமாணிக்கம், ஓம்.புரசை சேகர், சா.அருண்குமார், ராபர்ட் ராஜன், எம்.விஜயகுமார், க.பிரகதீஸ்வரர், கே.பி.சரவணன், வில்லி வாக்கம் மேற்கு கிழக்கு பகுதி அமைப்பாளர்கள்: வெ.மகேந்திரன், அனுசுயா பாண்டுரங்கன், கே.கிருஷ்ணவேணி, வெ.ராஜேஷ், எஸ்.வெற்றிவேல், சன்.இரவி, எஸ்.பழனவேல், எம்.செந்தில்குமார், ம.ஜெகதீஸ்வரன், டி.ஞானகிராமன், பிரேமா தயாளன், ஆர்.இருதயமேரி, வழக்கறிஞர் ஜி.அய்யனார், ஆர்.மோகன்ராஜ், டி.எச்.செல்வராஜ் ஆகியோர் சிறப்பித்தனர்.

வட்ட கழக செயலாளர் சிட்கோ. ப.சுரேஷ்பாபு நன்றி கூறினார்.

# ஏழை மக்களின் உழைப்புக்கான கூலியை உடனே வழங்கிடுவீர்!

## மக்களவையில் டாக்டர் கலாநிதி வீராசாமி பேச்சு!



புதுடெல்லி, ஏப்.8

வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி பாராளுமன்றத்தில் பேசியதாவது:

தி.மு.க. உள்ளிட்ட காங்கிரஸ் கூட்டணியின் ஆட்சி காலத்தில் கொண்டுவரப்பட்ட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டம் ஏழை மக்களுக்காக உருவாக்கப்பட்டது. கிராமப்புறங்களில் நிலவி வரும் ஏழ்மையை ஒழிப்பதற்கான திட்டம். தினசரி ரூபாய் 100 என, ஆண்டுக்கு 100 நாட்கள் ஏழை மக்களுக்கு கிராமப்புறங்களில் ஏரிகளை ஆழப்படுத்துதல், சாலை அமைத்தல் போன்ற பணிகளில் வேலை வாய்ப்பு வழங்கி, ஆண்டுக்கு ரூபாய் 10 ஆயிரம் கூலியாக கிடைப்பதற்கு வழி செய்த உன்னத திட்டம்.

ஆனால், கடந்த பத்து ஆண்டுகளாக ஒன்றிய பாஜக அரசு ஆண்டுதோறும் இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட வேண்டிய நிதியை குறைத்துக் கொண்டே வருகிறது. மகாத்மா காந்தியின் பெயரில் கொண்டுவரப்பட்ட திட்டம் என்பதாலோ என்னவோ, காழ்ப்புணர்வுடன் இந்தத் திட்டத்தையே சீர்குலைத்து வருகிறது.

**உடனடியாக வழங்கிடுவீர்!**

தமிழ்நாட்டில் இத்திட்டத்தின் கீழ் பணியாற்றிய ஏழை மக்களுக்கான கூலியை கடந்த ஐந்து மாதங்களாக வழங்காமல் சுமார் ரூபாய் 4000 கோடியை நிலுவையாக வைத்துள்ளது. இலட்சக்கணக்கான, அதிலும் குறிப்பாக பெண்கள் உள்ளிட்ட ஏழைத் தொழிலாளர்களின் உழைப்புக்கான ஊதியத்தை வழங்காமல் அவர்களை கொடுமைப்படுத்துவது மிகவும் கண்டனத்திற்குரியதாகும்.

அதேபோன்று தமிழ்நாட்டில் தொடக்கப்பள்ளி மாணவர்களுக்கு கல்வி வழங்கும் திட்டத்தின் கீழ் தர வேண்டிய ரூபாய் 2152 கோடியை இன்னமும் தாமதம் செய்யாமல் உடனடியாக வழங்கிடுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆண்டு தமிழகத்தில் இரண்டு இயற்கை பேரிடர்களால் ஏற்பட்ட சேதங்களை கணக்கிட்டு, பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் துயரத்தை தொடைக்க ரூபாய் 4000 கோடியை ஒன்றிய அரசின் இயற்கைப் பேரிடர் நிதியிலிருந்து வழங்குமாறு தமிழ்நாடு அரசு கோரிக்கை வைத்தது. பலமுறை தமிழக முதல்வர், எங்கள் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களும் ஒன்றிய அரசிடம் பேரிடர் கால நிதியை உடனடியாக வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். ஆனாலும், தமிழக மக்களை வஞ்சிக்க வேண்டும் என்ற தீய எண்ணத்துடன், ஒன்றிய அரசு இயற்கை பேரிடர் நிவாரண நிதியாக ரூபாய் 200 கோடி மட்டும் வழங்கியுள்ளது.

இவ்வாறு பழிவாங்கும் அரசியல் நடத்தாமல், மக்களுக்காக ஜனநாயக முறையில் அரசை நடத்துமாறு கேட்டுக் கொள்கிறேன். மேலும், மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் கீழ் நிலுவையிலுள்ள ரூபாய் 4000 கோடி, தொடக்கப்பள்ளி கல்வி திட்டத்தின் கீழ் தர வேண்டிய ரூபாய் 2152 கோடி மற்றும் இயற்கை பேரிடர் நிவாரண நிதியாக கேட்கப்பட்டு நிலுவையில் உள்ள ரூபாய் 39800 கோடி முதலானவற்றை உடனடியாக வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி. பேசினார்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**மிசா ஏ.டி. வேலு**
**ஏப்ரல் 8 (2016)**



கழகத்தில் ஐம்பது ஆண்டுகள் உறுப்பினராக இருந்தவர்.

ஒன்றிய அவைத் தலைவர், ஒன்றியச் செயலாளர், பொதுக்குழு உறுப்பினர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பல்வேறு பொறுப்புகளை வகித்து, திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியத்தில் கழகப் பணியாற்றியவர்..

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர். குறிப்பாக, மிசாவில் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**


### திருப்பூர் மாநகராட்சி வாவிபாளையம் உயர்நிலைப்பள்ளியில்

# பேராசிரியர் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கட்டிடம் கட்ட நடவடிக்கை!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தகவல்!



சென்னை, ஏப்.8

திருப்பூர் மாநகராட்சி 5வது வார்டு வாவிபாளையம் உயர்நிலைப்பள்ளிக்கு கூடுதல் கட்டிடம் கட்டப்படுமா என்று உறுப்பினரின் கேள்விக்கு அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பதிலளிக்கையில் பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நபார்டு வங்கியின் மூலமாக ஒதுக்கீடு செய்யப்பட்டு பள்ளிக் கட்டடம் கட்டப்படும் என்று தெரிவித்தார்.

இது குறித்து பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**கே.என்.விஜயகுமார்:** திருப்பூர் (வடக்கு) தொகுதி, திருப்பூர் மாநகராட்சி, 5வது வார்டு, வாவிபாளையம் உயர்நிலைப் பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்ட அரசு முன்வருமா?

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** இதற்கான கருத்துரு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரிடம் பெறப்பட்டுள்ளது. 2025-2026-ஆம் கல்வியாண்டில், பேராசிரியர் அன்பழகன் பள்ளி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், நபார்டு வங்கியின் மூலமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, பள்ளிக் கட்டடம் கட்டும் பணிகள் துவங்கப்படும்.

**கே.என். விஜயகுமார்:** வாவிபாளையம் மாநகராட்சி உயர்நிலைப்பள்ளிக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டித்தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா?

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொல்கிற இதே பள்ளியில் ஏற்கெனவே நான் ஆய்விற்கு வந்திருக்கிறேன். ஏற்கெனவே நான் அந்தப் பள்ளிக்கூடத்தை நேரடியாக பார்த்தவன் என்ற முறையில், நீங்கள் சொல்கிற மாதிரி 10ல் even 12 வகுப்பறைகள் நமக்கு தேவைப்படுகிறது. ஒரு நான்கு கழிவறைகள், கிட்டத்தட்ட அந்தப் பள்ளியில் strength மட்டும் இப்போது சுமார் 498 மாணவர்கள் இன்றைக்கு தமிழ் வழி மற்றும் ஆங்கில வழியில் படித்துக்கொண்டிருக்கிறார்கள். 2011-2012 ஆம் ஆண்டு இந்தப் பள்ளியின் தரம் உயர்த்தப்பட்டது என்று சொன்னால், நீங்கள் கேட்கின்ற மாதிரியான இந்த ஆண்டு நம்முடைய தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களால் கூடுதலாக ஆயிரம் கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. NABARD மூலமாகவும் இந்த நிதியைப் பெற்று, எவ்வளவு விரைவாக, பள்ளி மாணவச் செல்வங்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரமுடியுமோ, கண்டிப்பாக நாங்கள் செய்வோம் என்பதை பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**கே.என்.விஜயகுமார்:** திருப்பூர் (வடக்கு) சட்டமன்ற தொகுதி உட்பட, திருப்பூர் மாநகராட்சி பகுதி வார்டு எண் 18, பாப்பநாயக்கன்பாளையம் நடுநிலைப் பள்ளியில் சுமார் 408 மாணவ மாணவியர்கள் படித்து வருகின்றனர். இந்தப் பள்ளியில் பத்தாம் வகுப்பு வரை தரம் உயர்த்தி, தரவேண்டும், ஏனென்று கேட்டால் தென் மாவட்ட மக்கள் எல்லாம் அதிகமாக வசித்து வரும் பகுதியாக உள்ளதால் இப்பள்ளியில் படிக்கும் மாணவ-மாணவிர்கள் மேல் படிப்பிற்காக தொலைத் தூரத்தில் உள்ள பள்ளிக்கு செல்லவேண்டிய நிலை உள்ளது. அங்கு சரியான போக்குவரத்து வசதி இல்லாததனால் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, மைச்சர் அவர்கள் பாப்பநாயக்கன்பாளையம் மாநகராட்சி நடுநிலைப் பள்ளியை, உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தவேண்டுமென்று, பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி:** பள்ளி தரம் உயர்த்துவது குறித்து உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 1950-ஆம் ஆண்டுகளில் பார்த்தீர்களென்றால், 4 கிலோமீட்டர், 8 கிலோமீட்டர் தொலைவில் நடுநிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளிகள் என்கிற concept இருந்தது. முதன்முதலாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் காலத்தில்தான், ஒரு கிலோமீட்டர் தொலைவில் ஆரம்பப் பள்ளி இருக்கவேண்டும், 3 கிலோ மீட்டர் தொலைவில் நடுநிலைப் பள்ளி இருக்கவேண்டும், 5 கிலோமீட்டர் தொலைவில் உயர்நிலைப் பள்ளி இருக்கவேண்டும், 7 கிலோமீட்டர் தொலைவில் மேல்நிலைப் பள்ளி இருக்கவேண்டும் (மேசையைத் தட்டும் ஒலி) concept அப்போதுதான் நாம் கொண்டு வந்திருக்கிறோம்.

இப்போது நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, பள்ளி தரம் உயர்த்தும்போது High School கிட்டத்தட்ட 5 கிலோமீட்டருக்குள் எதாவது, அரசு பள்ளி, அரசு உதவிப்பெறும் பள்ளி இருந்தது என்று சொன்னால், அந்த விதிமுறைக்குட்படாமல் அது வராது. ஆனால், அப்படி இல்லாத பட்சத்தில் கண்டிப்பாக நம்முடைய CEOs மூலமாக கருத்துருப் பெறப்பட்டு, அதற்கான உரிய நடவடிக்கை கண்டிப்பாக எடுக்கப்படும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**மிசா அருணாசலம்**
**ஏப்ரல் 8 (1981)**



கழகம் துவங்கிய நாளிலிருந்தே உறுப்பினராகி, புதுக்கோட்டையின் முதல் நகரச் செயலாளராகவும், நீண்டகாலமாக பொதுக்குழு உறுப்பினராகவும் பொறுப்பேற்று கழகப் பணியாற்றியவர்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கழகம் வளர்த்த முன்னோடிகளில் ஒருவர் இவர்.

மும்முனைப் போராட்டத்தில் பங்கேற்றதோடு, மிசா கைதியாக ஒரு ஆண்டு சிறைவாசம் அனுபவித்தவர்.

தலைவர் கலைஞர் அவர்கள், புதுக்கோட்டை மாவட்டத்தில் நடைபெறும் கழக நிகழ்ச்சிகள் மற்றும் பொது நிகழ்ச்சிகளில் உரையாற்றும்போது "எனது அருமை நண்பர் மிசா அருணாசலம்" என்று நினைவு கூர்ந்து குறிப்பிடுவதே இவருக்குரிய புகழாரமாக அனைவரும் கருதுகிறார்கள்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



# 44 ஆம் ஆண்டு நினைவு நாள் அஞ்சலி



தோற்றம் – 5.6.1921
மறைவு : 8.4.1981

**மிசா இரா.அருணாசலம்**
**புதுக்கோட்டை**

**அன்புத் தந்தையே!**
தாங்கள் வாழ்ந்த காலம் முழுவதும்
தலைவர் கலைஞர் வழியில்
வழுவாது தொடர்ந்த உங்கள் பயணத்தை
தங்கள் நினைவோடு,
தனயன் நான் தொடர்கின்றேன்;
**கழகத் தலைவர் தளபதி தலைமையில்!**

தங்கள் நினைவில் வாழும்
**அரு.வீரமணி எம்.ஏ,**
அவைத் தலைவர் –
புதுக்கோட்டை வடக்கு மாவட்ட தி.மு.க.
தலைவர் கலைஞர் தமிழ்ச்சங்கம்,